| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண். 208593 /எப்.1/2023 நாள்: 14. 05.2024

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் : | அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு – தற்காலிக மதிப்பெண் பட்டியலை (Provisional Certificate) மாணவர்களுக்கு விநியோகித்தல் – தொடர்பாக. |
| பார்வை: | இவ்வலுவலக செய்திக் குறிப்பு நாள்.14.05.2024. |

*****

14.052024 அன்று மேல்நிலை மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 17.05.2024 முற்பகல் 11.00 மணி முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட USER ID, PASSWORD–ஐக் கொண்டு தங்கள் பள்ளி மாணவர்களுக்கு உரிய தற்காலிக மதிப்பெண் பட்டியலை (Provisitional Certificate) பதிவிறக்கம் செய்து, மாணவர்களுக்கு வழங்கலாம் அல்லது மாணவர்கள் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில், உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

<u>கூடுதல் அறிவுரைகள்:–</u>

- பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் தற்காலிக மதிப்பெண் பட்டியலை (Provisitional Certificate) சரிபார்த்து, அவற்றில் மாணவர் பெயர், பிறந்த தேதி, தலைப்பெழுத்து, புகைப்படம், பயிற்று மொழி ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. தற்காலிக மதிப்பெண் பட்டியலில் திருத்தங்கள் செய்து வழங்கப்பட்ட மாணவர்களுக்கு, பிழைகள் அற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சழுத்தம் செய்து வழங்க ஏதுவாக, அத்திருத்தங்களை பின்னர் இவ்வியக்கத்தால் அறிவிக்கப்படும் நாளன்று ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மேற்காண் அறிவுரைகளை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
இயக்குநர்

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்).
3. எச்4-பிரிவு (அலுவலகம்)